1982 ஏப்ரல் 7]

மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டம்.

*வினா எண் 789—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் பெரிய ஏரியை தூர்வாரி பண்படுத்தும் திட்டத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, மதுராந்தகம் பெரிய ஏரியை தூர்வாரும் பணி பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, சுமார் 157 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரித்து, நீர் நிர்வாக ஆணையாளர் மூலம் அரசுக்கு இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு இதுகுறித்து விரைவில் முடிவு எடுக்கும்.

வெள்ளாற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

*வினா எண் 790—திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றின் இரு கரைகளிலும் சேத்தியா தோப்பிலிருந்து பரங்கிப்பேட்டை முகத்துவாரம் வரை தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றில் சேத்தியாதோப்பு அணைக்கட்டுக்குக் கீழிருந்து புவனகிரி பாலம் வரை வெள்ளத் தடுப்புக்கரை அமைப்பதற்கான செயற்குறிப்பும் மற்றும் மதிப்பீடும் தொடர்ந்து புவனகிரி பாலத்திலிருந்து வங்காள விரிகுடா வரை வெள்ளத் தடுப்புக்கரை கட்டுவதற்கான மற்றொரு செயற்குறிப்பும் மற்றும் மதிப்பீடும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக இந்த வெள்ளாற்றின் இரு கரைகளுக்கும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட முன்வந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டால் சுமார் 12,000 ஏக்கர் நிலம் வெள்ளச் சேதத்திலிருந்து காப்பாற்றப்பட்டு, அதனால் சுமார் 22 கிராமங்கள் பயன்படும் என்று சொல்கிறார்கள். இந்த வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது பணம் ஒதுக்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பொதுவாக 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே வெள்ளத்தடுப்பு போன்ற இத்தகைய பணிகளுக்காக 19 கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 19 கோடியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திய இந்த இரண்டுத் திட்டங்களையும் பரிசிலித்து, இப்போது எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது, பூர்வாங்கமான சில பணிகள் முடிந்த பிறகு அரசு இதுகுறித்து உத்தரவிடும். சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றில் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுக்கு கீழிருந்து புவனகிரி பாலம் வரை வெள்ளத் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு 130 இலட்சம் ரூபாயும், புவனகிரி பாலத்திலிருந்து வங்காளவிரிகுடாவரை வெள்ளத் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு 126.5 இலட்சம் ரூபாயும் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் இப்போது எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி 'ஃப்ளட் ப்ரோன்' பகுதி என்று சொல்கிறார்கள். அது வெள்ளத்தாலும், புயலாலும் அவ்வப்போது பாதிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. 1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது மாத்திரம் சுமார் 4-5 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டது. இதை மனதில் கொண்டு, இந்த ஆண்டே அரசு விரைவுபடுத்தி அந்தத் திட்டத்தை அமல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல். கிட்டத் தட்ட 10–15 கிராமங்களை உள்ளடக்கிய 15,754 ஏக்கர் நஞ்சை நிலங்கள், மற்றும் 7,830 ஏக்கர் புஞ்சை நிலங்கள் பாதுகாக்கப் பட வேண்டிய நிலைமை இருப்பதால் இந்தத் திட்டம் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்று கருதப்பட்டு இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பூர்வாங்க வேலைகள் இருக்கின்றன. மிக விரைவில் அதை எடுத்துக் கொள்ளலாம்.